# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

O.S.No.174/2023

**CNR.No.TNCB19000**

Date.13.08.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | சரோஜினி | **வயது** | 70 |
| க/பெ | திம்மையன் | **வட்டம்** | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | சிக்கதாசம்பாளையம் | **மாவட்டம்** | கோயமுத்தூர் |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 13th August 2025

வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது என்றால் தெரியும். சர்வே எண்.485. அது 6 ஏக்கர் ஆகும். தாவா சொத்து ஒரே சர்வே எண்ணில் உள்ளது. எனது அப்பா எப்போது இறந்தார் என்றால் 1967 ம் ஆண்டு இறந்தார். 1967 லிருந்து 2023 சட்ட அறிவிப்பு வழங்கிய வரை தாவா சொத்தில் பாகம் கேட்டதற்கான ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. நான் அனுப்பிய வழக்கறிவிப்பிற்கு வா.சா. ஆ. 30 பதில் நோட்டிஸ் யார் அனுப்பினார்கள் என்ன விபரம் உள்ளது என்பது பற்றி வழக்கறிஞரிடம் கேட்டு அறிந்து கொண்டேனா என்றால் கேட்டு அறிந்து கொண்டேன்.

உண்மையிலேயே தாவா சொத்தில் உரிமை இருந்தால் பதிலிலுள்ள விபரங்களுக்கு மறு அறிவிப்பு அல்லது வழக்குரையிலோ சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு உரிமையில்லாததால் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா திருமலை கவுண்டருக்கும் திம்மப்ப கவுடர் சொத்துக்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து தற்போது யாருடைய உரிமையில் உள்ளது என்றால் எனது அப்பா பெயரில் உள்ளது. தாவா சொத்தை பொறுத்தவரை 19-வது பிரதிவாதி தாக்கல் செய்துள்ள 1 முதல் 6 ஆவணங்கள்படி

தாவா சொத்துக்கள் ஆதியில் கருத்திரும கவுடர் மகன் திம்மப்ப கவுடருக்கு சேர்ந்தது என்றால் சரியல்ல.

பட்டா எண்.960-ன்படி திம்மப்ப கவுடருக்கு கிருஷ்ணப்ப கவுடர் மற்றும் சுப்பைய கவுடர் ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என்றால் சரியல்ல. கிருஷ்ணப்ப கவுடரும் சுப்பைய கவுடரும் 1986 ம் ஆண்டிலேயே பட்டா வாங்கி அனுபவித்து வருகிறார்கள் என்றும் தாவா சொத்தில் எனக்கு உண்மையிலேயே உரிமையிருந்தால் என்னுடைய பெயரையும் பட்டாவில் சேர்த்திருப்பேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொருத்தவரை வா. சா. ஆ. 2 முதல் 7 வரையிலான ஆவணங்கள்படி கிரையம் மற்றும் பரிவர்த்தனைகள் ஏற்பட்டு தற்போது 19-வது பிரதிவாதி அதற்கு சட்ட ரீதியான உரிமையாளராக இருக்கிறார் என்றால் சரியல்ல. வா. சா. ஆ 2 முதல் 7 வரையிலான ஆவணங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

19-வது பிரதிவாதி தக்க தொகை கொடுத்து சட்ட ரீதியான உரிமையாளராக இருக்கிறார் என்றால் சரியல்ல. நான் திருமணம் ஆகி எந்த ஊரில் குடியிருக்கிறேன் என்றால் நேஷனல் நகரில் சிக்கதாசம்பாளையத்தில் குடியிருக்கிறேன். தாவா சொத்து உள்ள ஜடையம்பாளையத்துக்கும் சிக்கதாசம்பாளையத்துக்கும் எவ்வளவு தூரம் என்றால் 5 கி. மீட்டர் இருக்கும். தாவா சொத்தில் ஸ்ரீ இன்ப்ராடெக் என்ற நிறுவனம் கான்கிரீட் கலவை மிசின் போட்டு தகுந்த அரசாங்க அனுமதியுடன் 19-வது பிரதிவாதி மூலமாக அவர் கிரையம் வாங்கிய தேதியிலிருந்து நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல.

தாவா சொத்தில் நான் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருவதாக சொல்வது பொய் என்றும் தாவாசொத்திற்கு செலுத்தி உள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. தாவா பரிகாரம் காலாவதியானது என்றால் சரியல்ல. எனக்கு உண்மையிலேயே உரிமை இருந்திருந்தால் தக்க நேரத்தில் வழக்கை தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது சகோதரி பெயர் ராஜம்மாள். அவர் இந்த வழக்கில் 1-ம் பிரதிவாதி. இந்த வழக்கில் நான் மற்றும் 1 ம் பிரதிவாதி ஆகிய இருவரும் சேர்ந்துதான் இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். அதனால்தான் 1 ம் பிரதிவாதி எதிர்வாதம் செய்ய வில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் உண்மையான உரிமையாளருக்கு எதிராக வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்துக்கு வரி யார் செலுத்தி வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள மின் இணைப்பு விபரமும் எனக்கு தெரியாது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. தாவாப்படி எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் தாவா தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

K PALANIVEL

Digitally signed by K PALANIVEL
Date: 2025.08.13 21:16:56 +0530

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.